# இலங்கையில் முஸ்லிம் மக்கள் - வாழ்வும் வளமும்

*பேராசிரியர் கா. குகபாலன், தலைவர், புவியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

உலகில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் தமது பாரம்பரியம், நம்பிக்கை, விருப்புக்கமைய மதங்களைச் சார்ந்து அதன் வழி வாழ்ந்து வருகின்றனர். உலகில் செறிவாகப் பரவியுள்ள பிரதான மதங்களுள் இஸ்லாமும் ஒன்றாகும். உலகில் 1100 மில்லியன் மக்கள் இம்மதத்துடன் இணைந்து வாழ்வதுடன்.[1] இம்மக்கட் பரம்பல் மதீனாவிலிருந்து மேற்கே ஸ்பெயின் வரையும் கிழக்கே சீனா யாவா, பிலிப்பைன்ஸ் வரையும் வியாபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கு இம்மதம் சார்ந்தவர்களது உள்வரவானது ஏறத்தாள கி.பி. 650 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கின்றது.[2] அதாவது முஹம்மது நபி இறந்த சிறிது காலத்துக்குள்ளேயே இந்தியாவுக்குப் பல்வேறு காரணிகளின் நிமித்தம் உள்வரவினை மேற்கொண்டிருந்தனர். எனினும் இந்தியாவோடு ஒப்பிடும் போது இலங்கைக்கு இஸ்லாமியரின் வருகையானது காலத்தால் பிந்தியதாகும். இருப்பினும் கி.மு. 310 ஆம் ஆண்டில் அரபிகள் இலங்கை வழியாக சுமாத்திராவுக்கு வர்த்தக நோக்கத்துடன் சென்றுள்ளனர் என வரலாறு கூறுகின்றது.[3] இலங்கையிலும் மலபார் கரைகளிலும் அரபிகள் அதிகமாக வாழ்ந்து வந்துள்ளனர் என பிளினி (கி.பி. 23 – 79) குறிப்பிடுகின்றார்.[4]

## இலங்கையுடனான தொடர்பு :

முஸ்லீம்கள் இலங்கைக்கு வருவதற்கான காரணம் வர்த்தக நோக்கமேயாகும். "இலங்கையின் கரைகளை நோக்கி இஸ்லாமிய கடற்படை தானும் வரவில்லை. ஆனால், எந்தக் காரியத்தை இஸ்லாமியரின் வாள் செய்யத்தவறியதோ அதனை வியாபாரிகளின்

மூட்டை செய்துவிட்டது."[5] என குடிக்கணிப்புத் திணைக்களத் தலைவராகவிருந்த ஏ.ஜெ. ரணசிங்க அவர்கள் தெரிவித்துள்ளார். அராபியர் வரலாற்றுக்காலந் தொட்டு வர்த்தகப் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். அராபியப் பிரதேசத்திலிருந்து தமது வர்த்தகத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் கீழைத் தேசங்களுக்கு மட்டுமல்லாது மேலைநாடுகளுக்கும் வர்த்தகப் பொருட்களின் தன்மைக்கேற்ப தமது வர்த்தகத்தை விரிவுபடுத்தினர். காலப்போக்கில் தாம் சென்றடைந்த பிரதேசங்களைத் தங்கள் சொந்தப் பிரதேசங்களாகக் கருதி அவ்வவ்விடங்களில் தங்கிவிட்டதை வரலாறு தெரிவிக்கின்றது. உலக வரலாற்றில் சாம்ராச்சியத்தை அமைத்திருந்த உரோமர்களின் வர்த்தகச் செல்வாக்கு கி.மு. 2ஆம் நூற்றாண்டில் அராபியரினால் முறியடிக்கப்பட்டது. அக்காலத்திலிருந்தே அரபிகள் இலங்கையுடனும் கிழக்காசிய நாடுகளுடனுமான வர்த்தகத்தை விரிவுபடுத்திய போதிலும் 8ஆம் நூற்றாண்டின் முற்கூற்றில் முஸ்லீம் மக்கள் இலங்கையில் குடியேறினர் என சேர். அலெக்சாண்டர் ஜோன்சன் தெரிவிக்கின்றார்.[6] அக்காலப் பகுதியிலிருந்து இலங்கையில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் பல நாடுகளுடன் உறவுகளை வைத்துக் கொண்டிருந்தமையாலும் இலங்கை மன்னர்களுக்கு வர்த்தகத்தின் மூலம் அதிக வருமானத்தை அளித்தமையாலும், மன்னர்களுக்கு விசுவாசமாக இருந்தமையாலும், வைத்தியம், நெசவு முதலிய துறைகளில் பிறநாட்டு முறைகளை இலங்கையில் புகுத்தியமையாலும் இலங்கை மக்களது அன்பும் ஆதரவும் அவர்கள் பால் இருந்தன.[7] அது மட்டுமல்லாது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் கலிபா அப்துல் மாலிக் இப்னுமர்வானின் கொடுங்கோலாட்சியைத் தாங்க முடியாது ஹவும் கிளையைச் சேர்ந்த சிலர் தமிழகத்திலும் மலாக்காவிலும் இலங்கையிலும் குடியேறினர் எனத் தெரியவருகின்றது.[8] இவர்கள் வடக்கு, கிழக்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்குப் பிரதேசங்களில் குடியேறினர். கி.பி. 1024இல் பேருவளையில் ஒரு முஸ்லீம் குழுவினர் வந்து இறங்கியதாகக் கூறப்படுகின்றது.[9]

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முஸ்லீம்கள் அதிகளவில் குடியேறினர் எனினும் தமது தாய்நாட்டுத் தொடர்பினை முற்றிலும் அறுத்துவிடவில்லை.[10] இவர்கள் வர்த்தக நோக்கம் கொண்டவர்களாக இருந்தமையால் நாட்டின் தென்மேற்குப் பிரதேசங்களில் குறிப்பாக பேருவளை, காலி போன்ற இடங்களைத் தெரிவு செய்திருப்பர். இப்பிரதேசங்களில் சிங்களவர்களே அதிகமாக வாழ்ந்திருப்பதால் சிங்களப் பெண்களையே விவாகம் செய்யும் வாய்ப்பு இருந்திருக்கின்றது. எனவே, தமது மூதாதையர் சிங்களவர்களே எனவும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். (வீரகேசரி 10-03-1986).[11] ஆனால், அராபியாவிலிருந்த இலங்கைக்கு வருகை தந்தவர்களிலும் பார்க்க இந்தியாவின் கீழைக்கரைப் பகுதிகளிலும் முதலில் தமது தொழிலை நடாத்தி வந்தவர்கள் காலப்போக்கில் இலங்கையூடாக வர்த்தகத்தை மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பயன்படுத்தியே 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு வந்திருக்கலாம் எனவும் தமிழ்மொழியைச் சரளமாகப் பேசி வந்தமையால் தாம் எந்த இனத்தில் விவாகம் செய்தாலும் தமிழ்மொழியைத் தமது தாய்மொழியாக்கிக் கொண்டனர் என்பது பொதுவாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கி.பி. 9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் குடியேறிய முஸ்லீம்கள் தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்று தமிழரிடையே விவாகம் செய்து தமிழ்மொழியைத் தம்மொழிகளில் ஒன்றாக்கினர். எனினும் தமது தெய்வக் கொள்கையை மட்டும் உறுதியாகக் கடைப்பிடித்து வந்துள்ளனர்[12] எனவும், தெரிவிக்கப்படுகின்றது. எனவே, இலங்கையில் வாழும் பெரும்பாலான முஸ்லீம் மக்களின் மூதாதையினர் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இலங்கையில் வாழும் முஸ்லீம்களில் பெரும்பான்மையினர் தமிழ்மொழியையும் மதத்தினூடான தனித்துவத்தையும் பேணிப்பாதுகாத்து வருகின்றமைக்கு மதத்தில் கொண்டுள்ள இறுக்கமான பிடிப்பு, சமூக அந்தஸ்தில் முஸ்லீம் ஆண்களது நிலை உயர்வாக இருக்கின்றமை போன்ற காரணிகளைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

**ஐரோப்பியர் வருகையும் முஸ்லீம் மக்களின் பரம்பல் போக்கும்:**

இந்து சமுத்திரப் பிராந்திய வர்த்தகத்தில் 15ஆம் நூற்றாண்டு வரையும் ஏகபோக உரிமையைப் பெற்றிருந்த முஸ்லீம்களிடையே போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களின் வரவானது இவர்கள் தம் வர்த்தகத்தில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. போர்த்துக்கீசரின் பிரதான எதிரியாக முஸ்லீம்கள் கருதப்பட்டனர். நவீன ஆயுதங்கள், படை பலம் கொண்ட போர்த்துக்கீசரின் தாக்குதலினால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த முஸ்லீம்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இலங்கை மன்னர்கள் இவர்களுக்கு ஆதரவாகவிருந்த போதிலும் உள்நாட்டில் காணப்பட்ட அரசியல் குழப்ப நிலையினால் இதன் பயனை முஸ்லீம்கள் முழுமையாகப் பெறமுடியாமல் போய்விட்டது.[13]

இதன் விளைவாக வர்த்தகத்தில் ஏற்பட்ட பெரும் பாதிப்பினை ஈடுசெய்யும் பொருட்டு நாட்டின் உள்நாட்டு பிரதேசங்கள் நோக்கி இடம்பெயர்ந்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவர்களுக்கு இலங்கை மன்னர்கள் காணிகளை அன்பளிப்பாக வழங்கி ஆதரவளித்தனர். இதனால் சிங்களவர்களுடன் இணைந்து வாழத் தலைப்பட்டனர்.[14] குறிப்பாக மாயாதுன்னை மன்னனின் ஆட்சியில் படை வீரர்களாகவும் அரசியல் தூதர்களாகவும் இவர்கள் செயற்பட்டுள்ளனர். அத்துடன் போர்த்துக்கீசருக்கு எதிரான போராட்டங்களில் மன்னர்களுக்குப் பக்க பலமாகவிருந்துள்ளனர்.[15] இவற்றிற்குப் பிரதி உபகாரமாக மாயாதுன்னை மன்னனால், புத்தளம், மன்னார், சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை, பேருவளை, அளுத்கம, பெந்தோட்டை, காலி, வெலிகம போன்ற இடங்களில் குடியேற்றப்பட்டதாகத் தெரிய வருகின்றது.[16] கண்டி மன்னன் சேனாதரன் முஸ்லீம்களுக்குக் காணிகளை வழங்கினான். இதன் ஒரு பகுதியே மட்டக்களப்புப்

பிரதேசத்தில் ஏற்பட்ட முஸ்லீம் குடியேற்றமாகும்.[17] இலங்கையின் கிழக்குப்பகுதியில் விளைந்த நெல்லை அக்கரைப்பற்றுப் பகுதியிலமைந்திருந்த துறைமுகத்தினூடாக முஸ்லீம்கள் ஏற்றுமதி செய்ததாகத் தொலமியின் வரைபடம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.[18] இவற்றை அவதானிக்கும் போது இவர்களால் வர்த்தகத்துடன் விவசாயமும் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அறிய முடிகின்றது.

போர்த்துக்கீசர் வருகைக்கு முன்னர் முஸ்லீம்கள் யாழ்ப்பாணத்தில் அலுப்பாந்தி துறைமுகம் சார்ந்து வர்த்தக நோக்குடன் குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருந்தனர். போர்த்துக்கீசர் இப்பிரதேசத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அவர்கள் தற்போது வாழ்ந்து வருகின்ற முஸ்லீம் வட்டாரங்களில் குடியமர்த்தப்பட்டனர் எனத் தெரிய வருகின்றது.[19] மேலும், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மத்திய மாகாணப் பகுதி நோக்கி இடம்பெயர்ந்து வாழ்வதற்கு அவர்களது வர்த்தகக் கொள்கையானது முஸ்லீம்களுக்கு எதிரானதாகவிருந்தமை முக்கிய காரணியாகக் கொள்ள இடமுண்டு. மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொள்ளும் போது போர்த்துக்கீசர், ஒல்லாந்தரின் ஆட்சிகளும் அவர்களது வர்த்தகக் கொள்கைகளுமே முஸ்லீம்கள் உள்நாட்டு நோக்கி நகர்வதற்கும் விவசாயத் தொழிலில் ஈடுபாடு கொள்வதற்கும் வகை செய்தது எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் முஸ்லீம் மக்களின் பரம்பலில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படவில்லையாயினும் வர்த்தக நோக்கம், புதிய தொழில் துறைகளைத் தேடிக்கொள்ளல் போன்றவற்றுக்காகப் புதிய பிரதேசங்கள் நோக்கி கணிசமான முஸ்லீம்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர் என அறிய முடிகின்றது.

மேலும், கடற்பயணங்களில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக இலங்கைக் கரைகளில் இஸ்லாமியர் கரையொதுங்கிய நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சிறு வள்ளத்தில் வந்த மூன்று முஸ்லீம் மீனவர்கள்

கடல் கொந்தளிப்பினால் இருவர் இறக்கவே ஒருவர் நீந்தி, நயினாதீவிலே வாழ்ந்து வந்தபோது அவ்வூர் மக்கள் தமிழ் பெண்ணை விவாகம் செய்து வைத்தனர். இந்நிகழ்வு 1810க்கும் 1830க்குமிடையில் நிகழ்ந்திருக்கின்றது என இவ்வூர் முதியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவர்களது கிளைகளாக 122 முஸ்லீம் மக்கள் தற்போது இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருவதுடன் 1990ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஒட்டு மொத்தமாக முஸ்லீம்கள் வெளியேறிய போதும்கூட இவர்கள் தொடர்ந்தும் இங்கேயே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[20]

## குடித்தொகை வளர்ச்சிப் போக்கு :

இலங்கையில் வாழும் முஸ்லீம்களை இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். பிரித்தானியர் வருகை முன்னர் அராபியாவிலிருந்தும், இந்தியாவின் தென்பகுதியிலிருந்தும் காலத்துக்குக் காலம் வந்தவர்கள் “இலங்கை முஸ்லீம்கள்” எனவும் பிரித்தானியர் ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் பொருட்டு இந்தியத் தமிழருடன் உள்வரவினை ஏற்படுத்தியவர்களும் அதனைத் தொடர்ந்து வர்த்தக நோக்கம் கருதி வந்தவர்களும் “இந்திய முஸ்லீம்கள்” எனவும் அழைக்கப்பட்டனர்.[21] 1901ஆம் ஆண்டு வரையிலான குடிக்கணிப்புகளில் இவ்விரு பிரிவினரும் ஒன்றாகவே கணிக்கப்பட்ட போதிலும் 1911ஆம் ஆண்டு தொட்டு 1971ஆம் ஆண்டு வரையிலான குடிக்கணிப்புகளில் தனித்தனியே கணிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1981ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் இரு பிரிவினரும் ஒன்றாகக் கணிக்கப்பட்டு வருகின்றனர். 1881ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் 6.7 சதவீதத்தினராகவிருந்து 2001ஆம் ஆண்டுக் குடித்தொகையில் இவர்களின் பங்கு 8.7 சதவீதமாக அதிகரித்துள்ளமைக்கு இந்திய, இலங்கைத் தமிழரின் வெளியிடப்பெயர்வும் தேசிய வளர்ச்சியோடு ஒப்பிடும் போது முஸ்லீம்களின் வளர்ச்சி வீதம் சார்புரீதியாக அதிகரித்துக் காணப்படுவதுமேயாகும். அதாவது தேசிய வளர்ச்சி

வீதம் 2001ஆம் ஆண்டில் 1.6ஆகக் காணப்பட முஸ்லீம்களின் வளர்ச்சி வீதம் 2.74 ஆகவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அட்டவணை – I.

## அட்டவணை –I

### இலங்கையில் மாவட்ட ரீதியாக முஸ்லீம்களின் குடித்தொகை வளர்ச்சி 1981 - 2001

| மாவட்டம் | 1981 | 2001 | 1981 – 2001 வேறுபாடு | வருடாந்த வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 140461 | 205078 | 64617 | 2.3 |
| கம்பஹா | 38607 | 80320 | 41713 | 5.4 |
| களுத்துறை | 61706 | 92775 | 31069 | 2.5 |
| கண்டி | 112052 | 169029 | 56977 | 2.5 |
| மாத்தளை | 25836 | 38867 | 13031 | 2.5 |
| நுவரெலியா | 14668 | 17557 | 2889 | 1.0 |
| காலி | 25896 | 35346 | 9450 | 1.8 |
| மாத்தறை | 16457 | 22378 | 5921 | 1.8 |
| அம்பாந்தோட்டை | 4732 | 5506 | 774 | 0.8 |
| குருநாகல் | 61342 | 97778 | 36436 | 3.0 |
| புத்தளம் | 47959 | 131864 | 83905 | 8.7 |
| அநுராதபுரம் | 41833 | 61503 | 19670 | 2.4 |
| பொலநறுவை | 17091 | 27272 | 10181 | 3.0 |
| பதுளை | 26808 | 40455 | 13647 | 2.5 |
| மொனராகலை | 5322 | 8047 | 2725 | 2.6 |
| இரத்தினபுரி | 13531 | 20871 | 7340 | 2.7 |
| கேகாலை | 34832 | 51699 | 16867 | 2.4 |
| மட்டக்களப்பு | 79317 | 139166 | 59849 | 3.8 |
| அம்பாறை | 161481 | 245089 | 83608 | 2.6 |
| திருகோணமலை | 74403 | 133008 | 58605 | 3.9 |
| யாழ்ப்பாணம் | 13757 | - | - | - |
| மன்னார் | 28464 | 4085 | -24379 | - |
| வவுனியா | 6610 | 8471 | 1861 | 4.3 |
| முல்லைத்தீவு | 3777 | - | - | - |

Source :Department of Census and Statistics.

1981 – 2001ஆம் ஆண்டுகளுக்கிடையிலான குடித்தொகை வளர்ச்சி வீதம் 2.74ஆகவிருந்த போதிலும் மாவட்டங்களுக்கிடையிலான குடித்தொகை வளர்ச்சிவீதமானது வேறுபட்டமைந்துள்ளது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் ஆகக் குறைந்த வளர்ச்சியினைக் கொண்ட மாவட்டங்களாக அம்பாந்தோட்டை, நுவரெலியா, காலி, மாத்தறை

மாவட்டங்களைக் குறிப்பிடலாம். தேசிய முஸ்லீம் குடித்தொகை வளர்ச்சி வீதத்திலும் பார்க்க வளர்ச்சி வீதம் கூடிய மாவட்டங்களாக புத்தளம், கம்பஹா, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலநறுவை ஆகியன காணப்படுகின்றன. அதாவது, வடமாகாணத்திலிருந்து 1990களில் தூண்டப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக இம் மாவட்டங்களைச் சென்றடைந்தவர்களின் எண்ணிக்கையும் இவற்றுள் அடங்கும். குறிப்பாக பெருமளவிலான வடமாகாண முஸ்லீம்கள் புத்தளம் மாவட்டத்தையே தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அட்டவணை – II.

## அட்டவணை –II

### இலங்கையில் முஸ்லீம்களின் குடித்தொகை வளர்ச்சி 1881–2001

| ஆண்டு | மொத்தக் குடித்தொகை | இடைப்பட்ட கால அதிகரிப்பு | வருடாந்த வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 1881 | 184542 | - | - |
| 1891 | 197166 | 12624 | 0.68 |
| 1901 | 228034 | 30868 | 1.57 |
| 1911 | 266625 | 38591 | 1.69 |
| 1921 | 284848 | 18223 | 0.68 |
| 1946 | 409183 | 124335 | 1.75 |
| 1953 | 511425 | 102242 | 3.56 |
| 1963 | 682214 | 170789 | 3.33 |
| 1971 | 855724 | 173510 | 3.18 |
| 1981 | 1056972 | 201248 | 2.35 |
| 2001 | 1636164 | 579192 | 2.74 |

மூலாதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகள் 1881 – 2001.

பொதுவாக முஸ்லீம் மக்களின் வளர்ச்சி நிலையினை ஏனைய இனங்களோடு ஒப்பிடுமிடத்து பல்வேறு காரணிகள் தம்பங்கினைச் செலுத்தி உள்ளதைக் காணலாம். இச்சமூகத்தின் சமூக பொருளாதாரப் பண்புகளோடு கலாசாரப்பாரம்பரியமும் இணைவதால் இவ்விளைவினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. இஸ்லாமிய கலாசாரம் இளவயதில் விவாகம் செய்வதை எளிமைப்படுத்துகின்றது. இஸ்லாமிய மதமும், சட்டங்களும் ஒருவர் ஒரே தடவை நான்கு பெண்களை மனைவியாக வைத்திருக்கச் சம்மதம் தெரிவிக்கின்றன. இருந்தபோதிலும் இலங்கையில் இத்தகைய பண்புகள் மிகக் குறைவாகவே உள்ளது. ஏனைய இனத்தவர்களுக்கு விவாகம் செய்யும் வயதெல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் முஸ்லீம்களுக்குச் சட்டத்தினால் மட்டுப்படுத்தப்பட்டிருக்காததும் இங்கு குறிப்பிடத்தக்கது.[22] இலங்கையில் மட்டுமல்லாது உலகில் பல நாடுகளிலும் அவ்வந் நாடுகளிற் காணப்படும் ஏனைய இனங்களோடு ஒப்பிடுமிடத்து இயற்கை அதிகரிப்பு இவர்களிடையே அதிகமாக இருப்பதனைக் காண முடிகின்றது.

இலங்கையில் முஸ்லீம் மக்கள் பரவலாக வாழந்துவரினும் ஏனைய இனங்களோடு ஒப்பிடுகையில் இவர்களுக்குரிய சிறப்பான அம்சம் யாதெனில் கிராமப் பகுதிகளாயினும் சரி நகரம் சார் பகுதிகளாயினும் சரி குறிப்பிட்ட பகுதிகளில் செறிவாக வாழ்ந்துவரும் பண்பினைக் கொண்டிருக்கின்றமை ஆகும். மாகாண அடிப்படையில் நோக்கின் 2001ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த முஸ்லீம்களில் கிழக்கு மாகாணத்தில் 31.6 சதவீதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இதனையடுத்து மேல் மாகாணத்தில் 23.1 சதவீதத்தினராகவும் வடமேல் மாகாணத்தில் 14.0 சதவீதத்தினராகவும் அமைகின்றனர். ஏனைய மாவட்டங்களில் சராசரி 5.0 சதவீதத்திற்கும் குறைவாகவே வாழ்ந்துவரினும் வடமாகாணத்தில் 0.8 சதவீதமாகவே இருந்துள்ளனர். எனினும், மன்னார் நகரப்பகுதி, வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு வவுனியா நகரப்பகுதிகளில் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. 1981ஆம் ஆண்டில் வடமாகாணக் குடித்தொகையில் 5.0 சதவீதத்தினர் வாழ்ந்து வந்த போதிலும், 1990களில் இஸ்லாமிய மக்கள் அனைவரும் தூண்டப்பட்ட இடப்பெயர்வுக்குட்படுத்தப்பட்டமையால் 2001ஆம் ஆண்டு குடிமதிப்பீட்டில் இவர்கள் முழுமையாக இடம்பெற முடியாது

போய்விட்டது. 2002ஆம் ஆண்டு அரசு – விடுதலைப் புலிகளால் எட்டப்பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையையடுத்து முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ள போதிலும் முழுமையான உள்வரவு இடம்பெறவில்லை என்றே கூறல் வேண்டும். இவர்களில் கணிசமானோர் சென்றடைந்த பிரதேசங்களைத் தமது வாழ்விடப் பிரதேசங்களாக்கிக் கொண்டுள்ளனர். அட்டவணை–III.

## அட்டவணை - III

### இலங்கை, மாவட்ட அடிப்படையில் குடித்தொகைப் பரம்பல் – 2001

| மாவட்டம் | இலங்கையின் மொத்தக் குடித்தொகை | மாவட்ட அடிப்படையில் முஸ்லிம் குடித்தொகை | இலங்கையில் வாழும் மொ. குடி. தொ. முஸ்லிம் பங்கு (சத வீதம்) | மாவட்ட அடிப்படையில் முஸ்லிம் பங்கு (சதவீதம்) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2235289 | 205078 | 12.5 | 9.2 |
| கம்பஹா | 2066096 | 80320 | 4.9 | 3.9 |
| களுத்துறை | 1060800 | 92775 | 5.7 | 8.8 |
| கண்டி | 1272463 | 169029 | 10.3 | 13.3 |
| மாத்தளை | 442427 | 38867 | 2.4 | 8.8 |
| நுவரெலியா | 700083 | 17557 | 1.1 | 2.5 |
| காலி | 990539 | 35346 | 2.2 | 3.6 |
| மாத்தறை | 761236 | 22378 | 1.4 | 2.9 |
| அம்பாந்தோட்டை | 525370 | 5506 | 0.3 | 1.1 |
| குருநாகல் | 1452369 | 97778 | 6.0 | 6.7 |
| புத்தளம் | 705342 | 131864 | 8.0 | 18.2 |
| அநுராதபுரம் | 746466 | 61503 | 3.8 | 8.2 |
| பொலநறுவை | 359197 | 27272 | 1.7 | 7.6 |
| பதுளை | 774555 | 40455 | 2.5 | 5.2 |
| மொனராகலை | 396173 | 8047 | 0.5 | 2.0 |
| இரத்தினபுரி | 1008164 | 20871 | 1.3 | 2.1 |
| கேகாலை | 779774 | 51699 | 3.1 | 6.6 |
| மட்டக்களப்பு | 486400* | 139166 | 8.5 | 28.6 |
| அம்பாறை | 589344 | 245089 | 15.0 | 41.6 |
| திருகோணமலை | 340200* | 133008 | 8.1 | 39.7 |
| யாழ்ப்பாணம் | 490600* | - | - | - |
| கிளிநொச்சி | 127300* | - | - | - |
| மன்னார் | 151600* | 4085 | 0.2 | 2.7 |
| வவுனியா | 149800 | 8471 | 0.5 | 5.7 |
| முல்லைத்தீவு | 121700 | - | - | - |
| இலங்கை | 18733287 | 1636164 | 100.0 | 8.7 |

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கைகள் – 2001.
* மாவட்ட செயலக மதிப்பீட்டு அறிக்கைகள்.

2001ஆம் ஆண்டுக் கணிப்பீட்டின் பிரகாரம் மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்களின் பரம்பலினை நோக்கின் மாவட்ட மொத்தக் குடித்தொகையில் 41.6 சதவீத மக்கள் வாழும் மாவட்டமாக அம்பாறை திகழ்கின்றது. எனினும், 1971ஆம் ஆண்டில் 45.4 சதவீதத்தினராகவிருந்து படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றனர். இதேபோலவே அம்பாறை மாவட்டத் தமிழரின் பங்கு 1971, 2001ஆம் ஆண்டுகளில் முறையே 23.4, 18.7 சதவீதமாகும். இதேவேளை சிங்களவர்களின் பங்கு முறையே 30.4, 39.3 சதவீதமாகவுள்ளது. அதாவது சிங்கள மக்களின் உள்ளிடப்பெயர்வு அதிகரித்துச் செல்வதனால் சிறுபான்மை இனத்தவர்களின் பங்களிப்பு குறைவடைந்து செல்கின்றது. எதிர்காலத்தில் மேலும், குறைவடைவதற்கான வாய்ப்புக்களே நிறையவுள்ளன.

மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் இரண்டாவது மாவட்டம் திருகோணமலையாகும். இம்மாவட்டத்தில் வாழும் மக்களில் 2001ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 39.7 சதவீதத்தினர் முஸ்லீம்களாக உள்ளதுடன் ஏனைய இனத்தவர்களோடு ஒப்பிடுமிடத்து சார்புரீதியாக அதிகமாகவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர், சிங்களவர் முறையே 34.4, 25.7 சதவீதத்தினராகவுள்ளனர். 1971ஆம் ஆண்டுக்கணிப்பீட்டின் பிரகாரம் முஸ்லீம்கள், தமிழர், சிங்களவர்கள் முறையே 32.1, 38.2, 28.8 சதவீதத்தினராக இருந்துள்ளனர். அதாவது இம்மாவட்டத்தில் 1980கள் வரை தமிழர்களே பெரும்பான்மையினராக இருந்துள்ள போதிலும் முஸ்லீம்களின் உள்வரவு, தமிழர்களின் வெளியிடப்பெயர்வு போன்ற காரணிகளினால் முஸ்லீம் சிங்கள மக்களின் வீதாசாரம் அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மாவட்ட விகிதாசார அடிப்படையில் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் மூன்றாவது மாவட்டம் மட்டக்களப்பாகும். மொத்தக் குடித்தொகையில் 28.6 சதவீதத்தினர் வாழ்வதாக 2001ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் தெரிய வருகின்றது. அம்பாறை மாவட்டத்தைப் போலவே இம்மாவட்டத்திலும் இவர்கள் கொத்துக்கொத்தாக வாழ்ந்து வருகின்றனர். புத்தள மாவ்ட்டத்தில் 1971ஆம் ஆண்டில் முஸ்லீம்களின் பங்கு 10.0 சதவீதத்தினரேயாகும். 2001ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பில் 18.2 சதவீதமாக வளர்ச்சி பெற்றிருப்பதற்கு வடமாகாணத்திலிருந்து 1990களில் இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் பெரும்பாலானோர் இம் மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டமையே பிரதான காரணியாகவுள்ளது. (அட்டவணை – III) மாவட்டக் குடித்தொகையில் குறைந்த எண்ணிக்கையில் முஸ்லீம்கள் வாழ்ந்துவரும் மாவட்டங்களாக அம்பாந்தோட்டை (1.1%), இரத்தினபுரி (2.1%), மொனராகலை (2.0%), மாத்தறை (2.9%), நுவரெலியா (2.5%), காலி (3.6%), ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன.

நாட்டில் வாழும் முஸ்லீம்களில் மூன்றிலிரு பங்கினர் புத்தளம் மாவட்டத்தில் இருந்து மாத்தறை மாவட்டம் வரையிலான கரையோர, மாவட்டங்களிலும் (34.7%), கிழக்கு மாகாணத்திலும் (31.6%) வாழ மூன்றிலொரு பங்கினரே நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கண்டி மாவட்டத்தில் 10.3 சதவீதமான முஸ்லீம்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதாவது மேற்குறிப்பிட்ட மூன்று பிரதேசங்களில் 76.6 சதவீதமானவர்கள் பரந்து வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லீம் மக்கள் பரவலாக இலங்கையடங்கிலும் வாழ்ந்துவரினும் நாட்டின் எந்தவொரு மாவட்டத்திலும் அறுதிப் பெரும்பான்மையினராக இருக்கவில்லை. 2001ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தில் 41.6 சதவீதமானோர் முஸ்லீம்களாவர். இதனையடுத்து திருகோணமலை (39.7%), மட்டக்களப்பு (28.6%), புத்தளம் (18.2%), மாவட்டங்களில் கணிசமாக வாழ்ந்து வருகின்றனர். 1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இவர்களின் பங்கு 45.9% சதவீதத்தினராக இருந்தபோதிலும் சிங்கள மக்களை அரசு தொடர்ச்சியாகக் குடியேற்றி வருவதனால் படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராம நகரக் குடித்தொகை :

இலங்கையிலுள்ள 48 நகரங்களில் (மாநகர, நகரசபைகள்) முஸ்லீம்களின் மொத்தக் குடித்தொகையில் 29.2 சதவீதத்தினர் வாழ்ந்துவர 70.8 சதவீதத்தினர் கிராமவாசிகளாகவுள்ளனர். ஹொரண (0.9), அம்பலாங்கொட (1.9), கம்பஹா (4.1), நகரசபைகளில் மிகக் குறைவான முஸ்லீம்கள் வாழ்ந்துவர காத்தான்குடி, பேருவளை, கல்முனை, புத்தளம் ஆகிய நான்கு நகர, மாநகரசபைகளில் 50.0 சதவீதத்திற்குமதிகமான முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 30–50 சதவீதத்திற்கிடையில் நாவலப்பிட்டி, கம்பளை நகரசபைகளில் வாழ்ந்து வருகின்றனர். அட்டவணை– IV.

## அட்டவணை - IV

### இலங்கை, மாவட்ட அடிப்படையில் முஸ்லிம்களின் குடித்தொகைப் பரம்பல் - 2001

| மாவட்டம் | நகரம் | வீதம் | கிராமம் | வீதம் | மொத்த முஸ்லீம்கள் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 191150 | 93.2 | 13928 | 6.8 | 205078 |
| கம்பளை | 25314 | 31.5 | 55006 | 68.5 | 80320 |
| களுத்துறை | 34960 | 37.7 | 57815 | 62.3 | 92775 |
| கண்டி | 30876 | 18.2 | 138153 | 81.8 | 169029 |
| மாத்தளை | 10690 | 27.5 | 28186 | 72.5 | 38867 |
| நுவரெலியா | 4629 | 26.4 | 12928 | 73.6 | 16557 |
| காலி | 23253 | 65.8 | 12093 | 34.2 | 35346 |
| மாத்தறை | 10410 | 46.5 | 11968 | 53.5 | 22378 |
| அம்பாந்தோட்டை | 2414 | 43.8 | 3092 | 56.2 | 5506 |
| அம்பாறை | 67230 | 27.4 | 177859 | 72.6 | 245089 |
| குருநாகல் | 4997 | 5.1 | 92781 | 94.9 | 97778 |
| புத்தளம் | 29060 | 22.0 | 102804 | 78.0 | 131864 |
| அநுராதபுரம் | 3825 | 6.2 | 57678 | 93.8 | 61503 |
| பொலநறுவை | - | - | 27272 | 100.0 | 27272 |
| பதுளை | 7848 | 19.4 | 32607 | 80.6 | 40455 |
| மொனராகலை | - | - | 8047 | 100.0 | 8047 |
| இரத்தினபுரி | 7457 | 35.7 | 13414 | 64.3 | 20871 |
| கேகாலை | 528 | 1.0 | 51171 | 99.0 | 51699 |
| யாழ்ப்பாணம் | - | - | - | - | - |
| கிளிநொச்சி | - | - | - | - | - |
| மன்னார் | 4085 | - | - | - | 4085 |
| வவுனியா | 2339 | 27.6 | 6132 | 72.4 | 8471 |
| முல்லைத்தீவு | - | - | - | - | - |
| மட்டக்களப்பு | 4097 | 2.9 | 135069 | 97.1 | 139166 |
| திருகோணமலை | 13054 | 3.9 | 119954 | 96.1 | 133008 |
| மொத்தம் | **478216** | **29.2** | **1157948** | **70.8** | **1636164** |

ஆதாரம் : குடித்தொகைக் கணிப்பு அறிக்கைகள் - 2001.
* (வடமாகாண மக்கள் தவிர்ந்த)

கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தில் 153,299 முஸ்லீம் மக்கள் வாழ்ந்து வரினும் விகிதாசார அடிப்படையில் நோக்கின் மொத்தக் குடித்தொகையில் 23.9 சதவீதத்தினராகவே உள்ளனர். கொழும்பு

மாவட்ட நகரங்களிலுள்ள மொத்த முஸ்லீம்களில் (191150) 80.2 சதவீதத்தினர் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்திலேயே வாழ்கின்றனர். தமிழர்கள் 79.2 சதவீதத்தினராகவும் அமைகின்றனர்.

இலங்கையில் உள்ள 48 நகரங்களில் 13 நகரங்கள் மாநகரசபை அந்தஸ்தைக் கொண்டது. 48 நகரங்களில் வாழும் மொத்த மக்கள் தொகையில் முஸ்லீம்கள் 18.4 சதவீதத்தினரேயாகும். மாநகரசபை அந்தஸ்துடன் கூடிய பதின்மூன்று நகரங்களில் 330,928 முஸ்லீம் மக்கள் அல்லது மொத்த நகர மக்களில் 72.8 சதவீதத்தினர் வாழ்ந்துவர 27.2 சதவீதத்தினரே நகரசபைகளில் வாழ்ந்து வருகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக முஸ்லீம்கள் அதிகளவில் நகரப் புறங்கள் சார்ந்து வாழ்ந்துவருவதற்கு வரலாற்றுக் காரணிகளுடன்கூடிய பொருளாதார அமைப்பும் ஒரு காரணியாகவுள்ளது. அவர்களது வருகையின் நோக்கமே வர்த்தகச் செயற்பாடாகும். வரலாற்றுப் பின்னணி விவசாயத்தில் அதிகளவில் ஈடுபடத் தூண்டவில்லை. எனினும், கிராமப் புறங்களில் வாழ்ந்துவரும் கணிசமான முஸ்லீம்கள் அண்மைக்காலங்களில் விவசாயத்தை முதற் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். பொருளாதார பலம் குறைந்த ஆனால், நகரவாழ்வினை மேற்கொள்வோரில் பெரும்பாலானோர் சேவைத் தொழில்களையே பெரிதும் விரும்பியேற்றுள்ளனர். முஸ்லீம்களில் பெரும்பாலானோர் சேவைத் தொழில்களையே பெரிதும் விரும்பியேற்று உள்ளனர். முஸ்லீம்களில் பெரும்பாலானோர் பொருளாதார ரீதியில் நலிவுற்றவர்களாகவிருந்த போதிலும் சிறு பிரிவினர் மிகச் சிறப்புற்றவர்களாக இருப்பது இலங்கையில் மட்டுமல்லாது இஸ்லாமிய உலகில் காணப்படும் பொதுவான அம்சமாகும். கிழக்குமாகாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லீம்களில் பெரும்பாலானோர் விவசாயமல்லாத தொழில்களிலேயே ஈடுபாடு கொண்டுள்ளனர். பொதுவாக முஸ்லீம்களைப் பொறுத்தவரை

அவர்களிடம் காணப்படும் சிறப்பம்சம் யாதெனில் தாம் வாழும் சூழலுக்கேற்ப தம்மை உள்வாங்கிக் கொள்வதேயாகும். அட்டவணை – V.

## அட்டவணை –V
## முஸ்லீம் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் நகரங்கள்

| சதவீதம் | நகரங்களின் எண்ணிக்கை | நகரங்கள் |
|---|---|---|
| 90.0 க்கு மேல் | 01 | காத்தான்குடி |
| 70.0 – 89.9 | 02 | பேருவளை, கல்முனை |
| 50.0 – 69.9 | 01 | புத்தளம் |
| 30.0 – 49.9 | 02 | நாவலப்பிட்டி, கம்பளை |
| 20.0 – 29.9 | 07 | கொழும்பு, களுத்துறை, மாத்தளை, காலி, வெலிகம, அப்புத்தளை, கடுகண்ணாவை. |
| 10.0 – 19.9 | 13 | நீர்கொழும்பு, வத்தளை – மாபொல, கண்டி, ஹட்டன் – டிக்கோயா, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், பதுளை, பண்டாரவளை, இரத்தினபுரி, பலாங்கொடை, கொலன்னாவை, திருகோணமலை. |
| 5.0 – 9.9 | 09 | தெகிவளை – மவுண்லவேனியா, நுவரெலியா, மினுவாங்கொடை, பேலியகொடை, தலவாக்கலை – லின்டுலை, தங்காலை, குளியாப்பிட்டி, சிலாபம், அநுராதபுரம். |
| 4.99 இற்குக் குறைய | 13 | மொறட்டுவை, ஜெயவர்த்தனபுர – கோட்டை, சீதாவாக்கை, கம்பஹா, ஜாஎல, கட்டுநாயக்கா, சீதுவை, ஹொரண, பாணந்துறை, வத்தேகம, அம்பலாங்கொடை, அம்பாறை, கேகாலை, வவுனியா. |

Source : Census of Population and Housing 2001, Department of Census and Statistics, Colombo.

இலங்கையில் 1988ஆம் ஆண்டையடுத்து பட்டினசபை, கிராமசபை அந்தஸ்து கொண்ட பிரதேசங்களை ஒன்றிணைத்து பிரதேசசபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலுள்ள பிரதேசசபைகளில் வடமாகாணத்தில் உள்ள பிரதேச சபைகளிலும் நகர, மாநகர சபைகளிலும் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுடன் கூடிய மன்னார் நகரம் மற்றும் வவுனியா தெற்கு (சிங்களப் பிரிவு) வெங்கலச்செட்டிகுளம், வவுனியா வடக்குப் பகுதிகளில் 2001ல் பூரணமற்ற குடிக்கணிப்பு மேற்கொள்ளப் பட்டிருந்தது. இவற்றையும் சேர்த்து 295 பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்களில் முஸ்லீம்களின் பங்கு பற்றிக் கணிப்பிடும் போது பல சுவையான தகவல்களைப் பெறக்கூடியதாகவிருந்தது. மேற்குறித்த 295 பிரிவுகளில் 108 பிரிவுகளில் அங்கு வாழும் மக்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றனர். 10.0 சதவீதத்திற்கும் குறைவான முஸ்லீம்கள் வாழும் பிரதேச செயலகப் பிரிவுகள் 117 ஆகும். 30.0 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் 25 பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்ந்து வருகின்றனர். அட்டவணை – VI.

## அட்டவணை - VI

# இலங்கையில் பிரதேச செயலகங்களின் அடிப்படையில் முஸ்லிம் குடித்தொகை – 2001 (சதவீதத்தில்)

| மாவட்டம் | பிரதேச செயலகங்கள் | 0.9 < % | 1.0 4.9 | 5.9 9.9 | 10.0 19.9 | 20.0 29.9 | 30.01 49.9 | 50.0 69.9 | 70.0 89.9 | 90.0 > % | மொத்தப் பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 12 | 05 | 03 | 01 | 02 | - | 01 | - | - | - | 12 |
| கம்பஹா | 13 | 03 | 05 | 03 | 02 | - | - | - | - | - | 13 |
| களுத்துறை | 14 | 07 | 03 | 01 | 02 | - | 01 | - | - | - | 14 |
| கண்டி | 20 | 01 | 05 | 05 | 04 | 04 | - | 01 | - | - | 20 |
| மாத்தளை | 11 | 03 | 04 | 01 | 03 | - | - | - | - | - | 11 |
| நுவரெலியா | 05 | 02 | 02 | 01 | - | - | - | - | - | - | 05 |
| காலி | 18 | 13 | 04 | - | - | 01 | - | - | - | - | 18 |
| மாத்தறை | 16 | 07 | 05 | 03 | 01 | - | - | - | - | - | 16 |
| அம்பாந்தோட்டை | 11 | 07 | 03 | 01 | - | - | - | - | - | - | 11 |
| மன்னார் | 04 | - | - | 01 | - | - | - | - | - | - | 01 |
| வவுனியா | 04 | 01 | 01 | - | - | 01 | - | - | - | - | 03 |
| மட்டக்களப்பு | 12 | 04 | 01 | 01 | 02 | - | - | - | - | 04 | 12 |
| அம்பாறை | 19 | 09 | - | - | - | - | 02 | 01 | 03 | 04 | 19 |
| திருகோணமலை | 11 | 04 | - | - | 03 | - | - | 03 | - | 01 | 11 |
| குருநாகல் | 30 | 05 | 09 | 10 | 05 | 01 | - | - | - | - | 30 |
| புத்தளம் | 16 | 07 | 01 | 03 | 01 | - | 02 | 02 | - | - | 16 |
| அநுராதபுரம் | 22 | 05 | 05 | 05 | 05 | 02 | - | - | - | - | 22 |
| பொலநறுவை | 07 | 03 | 01 | - | 02 | 01 | - | - | - | - | 07 |
| பதுளை | 15 | 02 | 10 | 02 | 01 | - | - | - | - | - | 15 |
| மொனராகலை | 11 | 07 | 03 | - | 01 | - | - | - | - | - | 11 |
| இரத்தினபுரி | 17 | 11 | 05 | 01 | - | - | - | - | - | - | 17 |
| கேகாலை | 11 | 02 | 06 | 02 | - | 01 | - | - | - | - | 11 |
| **மொத்தம்** | **299** | **108** | **76** | **41** | **34** | **11** | **06** | **07** | **03** | **09** | **295** |

- Source : Census of Population and Housing 2001, Preliminary Release, Department of Census and Statistics.

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 04 பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகளில் குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 30.0% – 49.9% = | வனாத்துவில்லு | (38.7%) | முந்தல் | (37.6%) |
| | காரைதீவு | (36.7%) | பேருவளை | (32.2%) |
| | கொழும்பு | (31.8%) | நாவிதன்வெளி | (30.7%) |
| 50.0% – 69.9% = | குச்சவெளி | (66.4%) | அக்குறணை | (63.0%) |
| | கல்முனை | (60.0%) | புத்தளம் | (58.2%) |
| | கற்பிட்டி | (57.7%) | தம்பலகாமம் | (56.8%) |
| | மூதூர் | (55.0%) | | |
| 70.0% > | காத்தான்குடி | (99.9%) | சாய்ந்தமருது | (99.9%) |
| | அக்கரைப்பற்று | (96.3%) | வாழைச்சேனை | (96.2%) |
| | கிண்ணியா | (96.0%) | ஓட்டமாவடி | (95.6%) |
| | நிந்தவூர் | (94.5%) | அட்டாளைச்சேனை | (93.1%) |
| | இறக்காமம் | (89.1%) | சம்மாந்துறை | (85.4%) |
| | ஏறாவூர் | (84.6%) | பொத்துவில் | (76.3%) |

70 சதவீதத்துக்கு மேற்பட்ட முஸ்லீம் மக்கள் வாழும் பிரதேச செயல் பிரிவுகள் அனைத்தும் கிழக்கு மாகாணத்திலேயே அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## குடித்தொகை இயக்கப் போக்கு :

பொதுவாக முஸ்லீம்கள் வாழும் நாடுகளிற் கருவளவாக்கச் செயல்முறை அதிகமாக இருப்பதை அவதானிக்கலாம். "அபரிதமான அன்பையும் தாராளமான இனப்பெருக்க வளத்தையுமுடைய பெண் ஒருத்தியை விவாகம் செய்க." என இஸ்லாமியக் கோட்பாடே கூறிக் கொள்வதைக் கவனத்தில் கொள்ளலாம். பொருளாதாரக் காரணிகள் மட்டுமன்றிப் பெண்களது கல்வியில் அக்கறை செலுத்தாமை, இளவயதில் விவாகம் செய்தல், வாழும் சூழல் போன்றன இனப்பெருக்க வயதினரிடையே அதிக பிறப்புக்கள் நிகழ்வதைக் காணமுடிகின்றது. 2000ஆம் ஆண்டு பொது மற்றும் கண்டிய விவாக வயதானது ஆண்கள், பெண்கள் முறையே 28.8, 27.6, 24.7, 23.6 ஆகவிருக்க முஸ்லீம் விவாகத்தைப் பொறுத்தவரை ஆண்கள், பெண்கள் முறையே 26.6, 20.1 ஆகவிருக்கின்றது. அத்துடன் பிறப்பு வீதமும் முஸ்லீம்களிடையே 1000 : 24.0 ஆகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும், முஸ்லீம்களின் இறப்பு வீதமானது தேசிய இறப்பு வீதத்தோடு இணைந்து காணப்படுகின்றது. தேசிய வீதமானது 1000 : 6.0 ஆகவிருக்க முஸ்லீம்களின் இறப்பு வீதம் 1000 : 6.2 ஆகவேயுள்ளது. இதற்கு இவர்களிடையே பொருளாதார நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றம், சுகாதார மருத்துவ வசதிகளின் விரிவாக்கம், மக்களிடையே குறிப்பாக பெண்களிடையே கல்வி கற்கும் பண்பு அதிகரித்துவரல், அரசினால் வழங்கப்படும் மானிய மற்றும் உதவிகள் போன்ற பல காரணிகள் செயற்பட்டு வருகின்றன எனலாம்.